DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.203/2017**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா. 6
Defence
Court

Name : முகமது எர்ஷாத்
Father/ Husband Name : காதர் பாட்ஷா
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

எதிரி ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of
**10.10.2023**
**<u>முதல்விசாரணை:-</u>** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது பரமக்குடி தாலுகா காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தேவகோட்டை நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 29.04.2017ம் தேதி காலை 7.00 மணிக்கு புகார்தாரர் வீரையா என்பவர் கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரை பெற்று குற்ற எண்.230/2017 பிரிவு 3 Tamil Nadu Medicare Service Persons & Medicare Service Institutions Act ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.9).**

2. பின்னர் காலை 9.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜாகுமார், குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம தயார் செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.10 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.11).** பின்னர் 9.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து டிஎன்63 ஆர்9379 என்ற பதிவு எண் கொண்ட பிளாட்டினா

என்ற இருசக்கர வாகனத்தையும் அந்த வாகனத்தில் இருந்த Learner's License-யும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம் 91 அ.சா.ஆ.12).**

3. பின்னர் சாட்சிப்பட்டியலில் உள்ள 1 முதல் 6 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 17.05.2017ம்தேதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவின்படி முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் எதிரி சரணடைந்துவிட்டார். பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணையை 06.06.2017ம் தேதி அன்று முடித்து எதிரி மீது பிரிவு 3 Tamil Nadu Medicare Service Persons & Medicare Service Institutions Act-ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. புகார் மனுவில் எதிரியின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சென்னனால் சரிதான். புகார் மனுவில் எல்எல்ஆர்-யும் எனது மேலான கவனத்திற்கு சமர்ப்பிப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் எல்எல்ஆர் வாகனத்தில் இருப்பதாக மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது. எல்எல்ஆர் வாகனத்தில் இருப்பதாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் புகார்தாரரை எந்த கண்ணத்தில் அறைந்ததாக குறிப்பிட்டு சொல்லவிலலை என்று சொன்னால் சரிதான். புகார் மனுவில் கண்ணாடி உடைந்ததாக மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது என்றும் ஆனால்அது கண்ணில் அணியும் கண்ணாடியா அல்லது வேறு கண்ணாடியா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சென்னனால் சரிதான்.

2. சம்பவம் தேவகோட்டைஅரசு மருத்துவமனையில் உள்ள நுழைவுவாயில் உள்ள வராண்டாவில் நடைபெற்றது என்றால் சரிதான். புகார்தாரர் மதுபோதையில் பணி செய்யும் நபர் என்று பல்வேறு புகார்கள் மருத்துவர்கள் மூலம் அனுப்பப்பட்டது என்று சொன்னால் அவ்வாறு எதுவும் பெறவில்லை. புகார்தாரர் அதே மருத்துவமனையில் மது போதையில் தற்கொலைசெய்து கொண்டார் என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனாஎன்றால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் வரை தெரிந்து கொள்ளவில்லை. மருத்துவமனையில புற நோயாளியகள் பிரிவில் இருந்த நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் இரவு நேரம் என்பதால்

புறநோயாளிகள் இல்லை.

3. சாட்சிப்பட்டியலில் உள்ள சாட்சிகள் 2 முதல் 4 வரையிலான சாட்சிகள் மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் மருத்துவர்கள் என்று சொன்னால் சரிதான். அரசு மருத்துவமனையில் உள்ள சிசிடிவி கேமிரா பதிவுகளை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அந்த சமயத்தில் சிசிடிவி வேலை செய்யாததால் நான் தாக்கல் செய்யவில்லை. சிசிடிவி வேலை செய்யவில்லை என நான் யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் டாக்டர் ராமுவிடம்கேட்டு தெரிந்து கொண்டேன். டாக்டர் ராமு என்னிடம் வாக்கு மூலத்தில் சிசிடிவி பதிவுகள் சம்பவ நேரத்தில் இயங்கவில்லை என சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி ராஜ்குமார் எனது விசாரணையில் இருசக்கர வாகனத்தின் டேங்க் கவரில் இருந்து லைசன்ஸ்சை எடுத்ததாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளார்.

4. அரசு மருத்துவமனையில் பொருட்கள் எதுவும் சேதம் அடைந்ததாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். தேவகோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து நகர் காவல்நிலையம் சுமார் 200முதல் 300 மீ இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு மறுநாள் தான் என்னிடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் கொடுத்த புகாரில் சாட்சி திலகா, மருத்துவர் செந்தில்குமார் ஆகியோர்கள் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 மற்றும் 4 ஆகியோர்கள் எங்கள் காவல்நிலையம் அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுநர்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றும் சம்பவம் நடந்த தேதியில் எதிரி மருத்துவமனைக்கு உறவினரை பார்க்க சென்றார் என்றும் மதுபோதையில் இருந்த புகார்தாரர் எதிரியிடம் தகராறு செய்தார் என்றும் புகார்தாரர் மீது எதிரி புகார் கொடுத்துவிடுவார் என்று முன்யோசனையில் இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து எதிரியின் வாகனத்தையோ, எல்எல்ஆர்யோ கைப்பற்றவில்லை என்றும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றும் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி புகார்தாரரை அடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.